27th July 1965]

கோவில் ரதங்கள் செய்வதற்கான பயிற்சிப் பள்ளிகள்

*3 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவில் ரதங்கள் செய்வதற்கான பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) With a view to preserving the ancient art of manufacturing temple cars and to impart training in the manufacture and repair of temple cars on traditional lines the Government sanctioned a scheme in 1964 for the establishment of a Training Centre for the manufacture of temple cars at Nagercoil. The scheme involves a non-recurring expenditure of Rs. 19,500 and a recurring expenditure of Rs. 28,700.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியில் பயிற்சி பெறுவதற்கான ஆட்களை எந்தத் தகுதியின் அடிப்படையில் சேர்க்க இருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கலையைத் தொழிலாகக் கொண்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் முன்வரும்போது, அப்படிப்பட்டவர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே காணப்படுகிற தேர்களைப் போன்று தங்களுடைய நாட்டிலேயும் காட்சிப் பொருளாக வைப்பதற்குத் தேர்கள் கட்டித் தரவேண்டும் என்பதாக வெளிநாட்டார் கேட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேர் வேண்டுமென்று அவர்கள் கேட்கவில்லை. நம்முடைய தேர்களில் உள்ள சிற்பங்களைத்தான் அதிக விலை கொடுத்து வாங்கிப் போகிறார்கள்.

திரு. சா. கணேசன் : பழந்தேர்களை ஏலத்தில் படுமோசமான விலைக்கு விற்கப்படுவதைத் தடுத்து, அவற்றை இந்த பயிற்சிக் கூடத்திலே கொண்டு வந்து வைத்து தேர் கட்டும் கலையில் நம் நாட்டவர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்வார்களா ? இந்தக் கலையில் சிறந்த வல்லுநர்களாக இன்றைக்கு இருப்பவர்கள், எனக்குத் தெரிந்த வரையில் இரண்டே இரண்டு பேர்கள்தான். அதிலும் ஒருவருக்கு 65, 67 வயதிருக்கும். அவரை இந்தப் பயிற்சிக்கூடத்தில் அமர்த்தி இந்தப் பயிற்சியைச் செம்மைபடுத்த அரசாங்கம் உத்தேசம் செய்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் மனதில் யார் இரண்டு பேர்களை இந்தத் துறையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள் என்று எண்ணி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்

என்பது எனக்குத் தெரியாது. ஆனல், இந்தத் தொழிலில் தலைமுறை தலைமுறையாக ஈடுபட்டிருக்கிற குடும்பத்தில் வந்துள்ள சிற்பாசிரியர் திரு. குமாரசாமியையும், ரதத்திற்கு திரு. இராமசுப்பிரமணியம் என்பவரையும் வைத்துத்தான் நடத்துகிறோம்.

திரு. மு. கருணாநிதி : தமிழ்நாட்டில் உள்ள பழுதடைந்த தேர்களின் சிற்பங்கள் எல்லாம் குறைந்த விலையில் ஏலத்திற்கு விடப்பட்டு வெளிநாட்டாருக்கு அதிக விலைக்கு விற்கப்படுகின்றதே, அதைத் தடுத்து அந்தச் சிற்பங்களை இந்தப் பயிற்சிப் பள்ளியில் வைத்து அவற்றைப் போலச் செய்வதற்கு பயிற்சி அளிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் நாட்டில் இருக்கிற விக்கிரகங்கள், சிற்பங்கள் ஆகியவற்றை விற்பது பற்றி சில விதிகள் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு ஏதாவது உதவித் தொகை தரப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலைக்கு 60 ரூபாய் கொடுக்கிறோம்.

திரு. மு. சண்முகம் : விஞ்ஞானத்தில் முன்னேற்றமான பயிற்சிகளைப் பெறும் இந்தக் காலத்தில் ரதங்களைக் கட்டுவதோ, பாதுகாப்பதோ அவசியம் தான் என்பதாக அரசாங்கம் கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொன்மையாக வந்துள்ள நம்நாட்டுப் பெரிய கலைகளை எல்லாம் காப்பாற்ற வேண்டியது இந்த அரசாங்கத்தின் பொறுப்பு என்று தான் நினைக்கிறேன்.

திரு. சா. கணேசன் : அதற்காகத்தான் நான் முதலிலேயே ஒரு கேள்வி போட்டேன். இப்போது இருக்கிற தேர்களில் உள்ள சிற்பங்களை எல்லாம் ஏலத்தில் அக்கிரமமாகப் போட்டு. . .

கனம் சபாநாயகர் : ஏலத்தில் போடுவது அக்கிரமமா ?

திரு. சா. கணேசன் : ஏலத்தில் போடுவதை அக்கிரமம் என்று சொல்லவில்லை. அக்கிரமமான விலைக்கு, படுமோசமான விலைக்குப் போட்டு அதைப்போல பத்து மடங்கு, இருபது மடங்கு விலைக்கு வெளி நாட்டாருக்கு விற்பனை செய்யப்படுகிறதே. அதைத் தடுத்து அந்த ரதங்களையும், சிற்பங்களையும் இந்தப் பயிற்சிப் பள்ளியில் வைத்து, ஒரு இரும்பு ஆணிகூட இல்லாமல் கட்டப்பட்டிருக்கிற அந்த முறையை இந்த மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பார்களா ? அத்தகைய திட்டம் ஏதாவது இருக்கிறதா ? இதுபற்றி கனம் அமைச்சர் விடைதர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

27th July 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சம்பந்தமாகப் பலருக்குப் பல யோசனைகள் இருக்கலாம். அவற்றை எழுதி அனுப்பினால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, பழங் காலத் தேர்களைத் தவிர இப்போது புதியதாகத் திருவொற்றியூர், திருவாரூர் போன்ற இடங்களில் தேர்கள் கட்டப்பட்டிருக்கின் றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது தான் பள்ளிக் கூடமே துவங்கி இருக்கிறோம். ரதங்கள் எல்லாம் எப்படிக் கட்ட வேண்டும் என்பதைப் பற்றி சாஸ்திரங்களில் இருக்கின்றன. அந்த சாஸ்திரப்படி ரதங்களை எப்படிக் கட்டுவது என்று தெரியாது இருக்கும் நிலையைப் போக்க, பயிற்சி கொடுக்கப்படுகிறது.

திரு. எம். எஸ். மணி : இந்தப் பயிற்சிப் பள்ளியில் இதுவரை எத்தனை மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் ? அத்தகைய பயிற்சிப் பள்ளி ஒன்றைத் திருச்சியில் ஆரம்பிக்கும் உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது பத்து மாண வர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். பட்ஜெட்டின்போது திருச்சியைப் பற்றிய கோரிக்கையைப் போட்டுக் கொள்ளலாம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : தமிழ் நாட்டில் பல ஊர்களில் தேர் கள் இருக்கின்றன என்றாலும் எந்த ஊரில் உள்ள தேர் மிகவும் சிறப்பானது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எனக்கு அத் துறையில் நிபுணத்துவம் கிடையாது. (ஓர் அங்கத்தினர் : திருவாரூர்) இருக்கலாம். என்னைக் கேட்டால் எங்கள் ஊரில் உள்ள தேர்தான் சிறப்பானது என்று சொல்வேன். இந்தக் கலை அழிந்து போகா மல் இருக்கத்தான் தக்க பாதுகாப்பு எடுத்துக் கொள்ள அரசாங்கம் முயற்சி செய்கிறது.

திரு. மு. கருணாநிதி : இந்தப் பயிற்சிப் பள்ளியில் செய்யப்படு கிற தேர் சிற்பங்களையாவது மக்களுக்குக் காட்சிப் பொருளாக வைக்க ஏற்பாடு செய்வார்களா ? தகரக் கொட்டகை போட்டு அடைத்தும், கீத்துக் கொட்டகை போட்டு அடைத்தும் இப் போது தேர்களை வைத்துள்ளது போல வைக்காமல் இருப்பார் களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : செய்யப்படுகிற பொருள் கள் எல்லாம் பொதுவாகப் பார்வைக்கு வைக்கப்படும்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : இந்தக் கலையைக் காப்பாற்று வதற்குப் பயிற்சி கொடுப்பது அவசியம் தான். ஆனால் தி.க., தி.மு.க., பிரசாரங்களினால் தேர் இழுப்பதற்கே ஆட்கள் வராது போய்க் கொண்டிருக்கும்போது தேர்களைக் கட்டி என்ன செய்வது? அதற்கும் அரசாங்கம் ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[27th July 1965

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேர் இழுக்க மக்கள் முன் வந்தாலும், வராவிட்டாலும் இந்தச் சிற்பக் கலை நம் நாட்டில் நீடித்து இருக்க வேண்டும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்து மதச் சம்பிரதாயப்படி தேர்கள் கட்டமுன்வந்துள்ள அரசாங்கம்--சாதி, சமய சார்பற்ற அரசாங்கம் என்று சொல்லிக் கொள்கிற நம் அரசாங்கம்— கிருஸ்துவ, முகமதிய கலாசாரங்களின்படியும் தேர் கட்ட பயிற்சி அளிப்பார்களா ?

திரு. சா. கணேசன் : அவர்களுக்கு ரதங்களே கிடையாது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பழங்கால முறைப்படி தான், புராதன சாஸ்திரங்களின்படிதான் பயிற்சி கொடுக்கிறோம்.

Report of British-American Consortium on the Fifth Steel Plant.

* 4 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a copy of the report submitted by the British-American Consortium on the location of the fifth steel plant in the State has been received by the Government; and

(*b*) if so, the details of the recommendations regarding Salem-Neyveli Steel Project therein?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No Sir,

(*b*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அந்த அறிக்கை நம் அரசாங்கத்திற்கு வராவிட்டாலும் அதனால் சேலம் உருக்காலைத் திட்ட அனுமதி ஒத்தி வைக்கப்பட்டது என்பது உண்மைதானா ? அதை இந்த அரசாங்கம் ஆட்சேபித்துள்ளதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சேலம் உருக்காலைத் திட்டம் ஒத்திவைக்கப்படவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : சேலம் உருக்காலைத் திட்டத்தினுடைய திட்ட அறிக்கை 1964-ஆம் வருஷத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அப்படி விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருந்தும் அதைச் செயல்படுத்த உத்தரவு அளிக்கப்படாமல் இடையில் ஆங்கிலோ-அமெரிக்கப் பரிசீலனைக்கு இதை அனுப்பியதற்கு யார் பொறுப்பாளி ? அதை இந்த அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளதா ? அவ்வாறு ஏன் அனுப்ப வேண்டும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற சேலம் உருக்காலைத் திட்டம் சம்பந்தமாக ஒரு தனி அறிக்கை தயார் செய்யப்பட்டது. அது மத்திய சர்க்கார் கையில் இருக்கிறது. அதுதான் தஸ்தூர் கம்பெனி அறிக்கையாகும். நம்முடைய ராஜ்ய சட்டசபையிலும் அந்த அறிக்கை முன்பு வைக்கப்பட்டது. இதற்கிடையில் இந்திய